# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2005, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ. 10/2005
4852

## 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்துக்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறான வீதங்களில் விதிக்கப்படுவதுடன் அறவிடப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறான அந்தந்தத் தொகைகளுக்குச் சமமாக விதிப்பனவு செய்யப் படுவதுடன் அறவிடப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் துக்கான அட்டவணையை மாற்றீடு செய்தல்.

**"அட்டவணை**

(பிரிவு 2)

பாகம் I

இதற்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோராண்டுக்கும் குதிரைப் பந்தயப் பணயத்தொழிலர் என்னும் தொழிலைக் கொண்டு நடத்து கின்ற ஆளொருவரினாற் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்.

2 –PL 000177– 1,250 (2005/03)

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| *ஆண்டு* | *விதிப்பனவின் தொகை* |
| *1. 1988, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்* | *ஓர் இலட்சம் ரூபா.* |
| *2. 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்* | *பத்திலட்சம் ரூபா.* |
| *3. 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் —* | |
| *(i) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படுமிடத்து* | *முப்பதாயிரம் ரூபா.* |
| *(ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து* | *பத்தாயிரம் ரூபா.* |
| *4. 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் —* | |
| *(i) முகவர்கள் மூலம் செய்யப்படும் பந்தயத் தொழிலுக்காக* | *பத்திலட்சம் ரூபா.* |
| *(ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படுமிடத்து* | *இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா.* |
| *(iii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து* | *இருபத்தையாயிரம் ரூபா.* |

## பாகம் II

இதற்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோராண்டுக்கும் சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்தும் ஆளொருவரினால் செலுத்தப் படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| *ஆண்டு* | *விதிப்பனவின் தொகை* |
| *1. 1988, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்* | பத்திலட்சம் ரூபா. |
| *2. 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்* | இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா. |
| *3. 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் —* | |
| (i) சூதாட்ட தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக (ருட்ஜினோ விளையாடுதல் தவிர) | ஒரு கோடியே இருபதிலட்சம் ரூபா. |
| (ii) ருட்ஜினோ மட்டுமே விளையாடுதல் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக | ஐந்து இலட்சம் ரூபா. |
| *4. ருட்ஜினோ விளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக, 2005, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்* | ஐந்து கோடி ரூபா.” |

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள , தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்